**சுருக்கம்**

கைத்தறித் தொழில் – கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் ஐந்து வடிவமைப்பாளர்கள் நியமனம் செய்தல் – ரூ.15,00,000/– (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி1) துறை

அரசாணை (நிலை) எண். 226

நாள் 11 .10.2013
விஜய புரட்டாசி 25
திருவள்ளுவராண்டு 2044

**படிக்கப்பட்டது:–**

1. 2013–2014ஆம் ஆண்டிற்கான கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் மானியக் கோரிக்கை எண்.17–இல் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் – அறிவிப்பு எண்.7.
2. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் கடிதம் ந.க.எண்.18825/2013/எச்.3, நாள் 12.6.2013. மற்றும் 31.7.2013.

------

**ஆணை:–**

2013–2014–ஆம் ஆண்டிற்கான கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் 22.4.2013 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளில், அறிவிப்பு எண்.7–இல் கீழ்க்கண்டவாறு அறிவிக்கப்பட்டுள்ளது:–

**கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் கைத்தறி இரகங்களில் புதிய வடிவமைப்புகளை உருவாக்கும் வகையில் வடிவமைப்பாளர்களை நியமனம் செய்தல்**

"சந்தையில் ஏற்பட்டுள்ள போட்டிகளை எதிர்கொள்ளும் வகையில் வாடிக்கையாளர்களின் இரசனைக்கு ஏற்றவாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கைத்தறி இரகங்களில் புதிய வடிவமைப்புகளை உருவாக்கி கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் விற்பனையை அதிகரிக்கும் நோக்குடன் வடிவமைப்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள். இதற்கென தனியே ஒரு பிரிவு உருவாக்கப்படும். இதனால் அரசுக்கு ரூ.15 இலட்சம் செலவு ஏற்படும்".

/த.பி.பா/

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதங்களில் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் வாடிக்கையாளர்களின் இரசனைக்கேற்ப கைத்தறி இரகங்களில் புதிய வடிவமைப்புகளை உருவாக்கும் வகையில் ஐந்து வடிவமைப்பாளர்களை தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய ரூ. 15.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேற்காணும் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் பரிந்துரையை அரசு கவனமாக பரிசீலித்து, அதனை ஏற்று "கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் வாடிக்கையாளர்களின் இரசனைக்கேற்ப கைத்தறி இரகங்களில் புதிய வடிவமைப்புகளை உருவாக்கும் வகையில் ஐந்து வடிவமைப்பாளர்களை தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்திட நடப்பாண்டில் ரூ.15,00,000/– (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு மானியமாக வழங்கப்படுகிறது. அடுத்த ஆண்டு முதல் இச்செலவினத்தை கோ–ஆப்டெக்ஸ் நிறுவனமே மேற்கொள்ள வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையான ரூ.15,00,000/– கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:–

> "2851–00 கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் – 103 கைத்தறித் தொழில்கள் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – KY. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு (கோ–ஆப்டெக்ஸ்) மானியங்கள் –09. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை "

(த.தொ.கு. 2851–00–103– KY – 0930)

6. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினத்தை மேற்கொள்ள கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

7. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் ஒரு "புது துணைப்பணி" குறித்த திட்டமாகும். இதற்காக சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணைகள் நிதி (வரவு – செலவு பொது–1)த் துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் பெற உரிய படிவத்தில் இவ்வரசாணையின் இரு படிகளுடன் நிதி (வரவு–செலவு பொது–1)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை துணை மானியக்

......3/–

கோரிக்கையில் சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் இதற்கான குறிப்புடன் நிதி (வரவு–செலவு பொது–1) / தொழில்கள்)த் துறைக்கு அனுப்புமாறும் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தை 2013–2014–ஆம் ஆண்டுக்குள் செலவு செய்து அத்தொகை முறையாக செலவிடப்பட்டது குறித்த அறிக்கையினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.கு.எண். 55414/தொழில்கள்/2013, நாள் 10.10.2013–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1599 (ஆயிரத்து ஐந்நூற்று தொண்ணூற்று ஒன்பது)

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹர்மந்தர் சிங்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்:
கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், சென்னை – 600 108.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்., சென்னை – 600 008.
மாநில தலைமை கணக்காயர் (A&E), சென்னை– 600 018/( பெயரில்).
மாநில தலைமை கணக்காயர் (CA), சென்னை– 600 018 /( பெயரில்).
மாநில கணக்காயர் (CAS), சென்னை– 600 009.

**நகல்:–**
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மைச் செயலாளர், சென்னை–600 009.
மாண்புமிகு அமைச்சர் (கைத்தறி மற்றும் துணிநூல்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
மாண்புமிகு அமைச்சர் (நிதி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
நிதித் (தொழில்கள் / வ.செ.பொ.I/II / BPE) துறை, சென்னை– 600 009.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர், சென்னை– 600 009.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (ஏ1/பி1) துறை, சென்னை–600 009.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 11.10.13
11/10/2013